# 18 ஔவையாரும் நெல்லிக் கனியும்



*காட்சி -1*

இடம் : அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை.

பாத்திரங்கள் : அதியமான், அரசி, ஔவையார், வாயிற்காவலன்.

***அதியமான்*** : *(அதியமான் தனது பூசை அறையில் வணங்கிக் கொண்டிருக்கின்றார்.)* எம்பெருமானே! இறைவா! எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ வேண்டும். செல்வம் கொழிக்கும் நாடாக எனது நாடு இருக்க வேண்டும்.

**காவலன்** : (வாசலுக்கு வந்து பணிந்து) வாழ்க மன்னா! வாழ்க அரசே!

**அதியமான்** : காவலனே! என்ன அவசரம்? என்ன செய்தி?

**காவலன்** : தங்களைக் காண ஔவையார் வந்திருக்கிறார்.

**அதியமான்** : நல்லது, மிக்க மகிழ்ச்சி, அவரைத் தகுந்த முறையில் உபசரித்து அழைத்து வா. (காவலன் செல்கிறான். அதியமான் ஆவலோடு வெளியே வருகிறான். ஔவையார் வருகிறார்.)

**அதியமான்** : வாருங்கள் ஔவைப்பிராட்டியாரே! வாருங்கள்! உங்களைக் கண்டு பல நாட்கள் ஆகிவிட்டன. நலந்தானே?

**ஔவையார்** : என் நலத்துக்கு ஏதும் குறைவில்லை. உன்னைக் காண வேண்டும் போல ஒரு உணர்வு தோன்றியது. வந்து விட்டேன்.

**அதியமான்** : தமிழறிந்த பெரும்புலவர் நீங்கள். தமிழைப் பற்றிய சிந்தனைக்கு அப்பால் என்னைப் பற்றியும் சிந்திக்கிறீர்களே! மிகவும் நன்றி.

**ஔவையார்** : உன்னை எப்படி மறக்க முடியும்? உன் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். மன நிறைவோடு வாழ்கிறார்கள்.

**அதியமான்** : எல்லாம் உங்கள் அறிவுரையால் வந்தவையே. அரசர்களைப் புலவர்கள் வழிநடாத்த வேண்டும். அப்போதுதான் அரசர்கள் மக்களை நல்வழியில் வாழவைக்க முடியும்.

**ஔவையார்** : நானும் ஏதோ என்னால் முடிந்த அளவுக்கு ஊர் ஊராகச் செல்கிறேன். சிறார்கள், இளையோர்கள், முதியோர்கள் என யாவரையும் சந்திக்கின்றேன். அறநெறியைப் போதிக்கின்றேன்.

**அதியமான்** : தங்கள் போதனையால்தான் இந்தத் தமிழும் தமிழ் உலகமும் மேலோங்கி நிற்கின்றன. பிராட்டியாரே!

மன்னிக்க வேண்டும். இந்த ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். (கையைப் பிடித்து ஓர் ஆசனத்தில் அமரச் செய்கிறார்.)

**ஔவையார் :** நடந்த களைப்பு ... (அமருகிறார்.)

**அதியமான் :** தங்களுக்கு உரிய விருந்தை நான் தருவேன். வேண்டிய பொன்னும் பொருளும் தருவேன். சில நாட்கள் இங்கே தங்கிச் செல்ல வேண்டும்.

**ஔவையார் :** அரசே! அரசனாகிய நீ அரண்மனையில் இருந்து ஆட்சி புரிய வேண்டும். புலவர்தான் பல இடங்களுக்கும் செ ன்று மக்களுக்குப் போதிக்க வேண்டும். அதனால் நான் இங்கே தங்கியிருப்பது பொருத்தமாகாது.

**அதியமான் :** உங்கள் அருந்தமிழ் கேட்டு அதிகநாட்கள் ஆகிவிட்டன.

**ஔவையார் :** தமிழால் மக்களுக்கு நல்லொழுக்கத்தைச் சொல்லிக் கொடுப்பதுதான் என் வேலை. நான் இங்கேயே தங்கி உன்னோடு மட்டும் பேசிக் கொண்டிருக்க முடியாது.

**அரசி :** (அரசி வருகிறார்.) தமிழ் மூதாட்டிக்கு என் தலை சாய்ந்த வணக்கங்கள்.

**ஔவையார் :** பொட்டோடும் பூவோடும் புகழ் நல்க வாழ்வாய்!

**அரசி :** நன்றி. இன்று இங்கே உணவருந்தி எம்மை மகிழ்விக்க வேண்டும். நானே என் கையால் பரிமாறுவேன்.

**ஔவையார் :** அரசியாரே! உங்கள் உபசரிப்பை நானறியாதவளா? நிச்சயம் உணவருந்திச் செல்வேன்.

**அதியமான் :** (ஒரு நெல்லிக்கனியைக் கொண்டுவருகிறார்.) தாயே! இந்த நெல்லிக்கனியைத் தாங்கள் உண்டு என்னை மகிழ்விக்க வேண்டும்.

**ஔவையார் :** நல்லது (எடுத்து உண்கிறார்.) ஆகா... ஆகா... அரிய சுவையாக இருக்கிறதே! உனக்கு இது எப்படிக் கிடைத்தது?

**அதியமான்** : எங்கள் நாட்டுப் பெருமலையில் ஒரு நெல்லி மரம் இருப்பதை அறிந்தேன். அது ஒரே ஒரு கனி மட்டும் கொடுப்பதாகவும் அதை முயன்று பறித்து உண்பவர் நோய் நொடியின்றி நீண்ட நாட்கள் வாழலாம் என்றும் அறிந்து அதனைப் பறித்து வந்தேன்.

**ஔவையார்** : ஆ... சிரமப்பட்டு பெருமுயற்சி செய்து நீ பறித்துக் கொண்டு வந்த அரிய நெல்லிக்கனியை நீயல்லவா உண்ண வேண்டும்?

**அதியமான்** : பிராட்டியாரே! நான் சாதாரண அரசன். என்னைப் போல ஆயிரம் அரசர்கள் இந்த மண்ணை ஆட்சி செய்யலாம். ஆனால் நீங்களோ கல்வியறிவு நிரம்பப் பெற்ற புலவர். நீங்கள்தான் நீண்டகாலம் நோய் நொடியின்றி வாழ வேண்டும். உங்களால்தான் நாடு நல்லொழுக்கத்தில் நிலைத்திருக்கும்.

**ஔவயார்** : அரசே! என்னே உன் கொடை! உன்னை எப்படிப் புகழ்வது? தன் நலம் கருதாது மக்கள் நலம் கருதும் நீயல்லவா அரசன். நான் வணங்கும் அந்தக் கடவுளின் கருணையால் நீ நீண்டகாலம் புகழோடு நிலைபெறுவாயாக!

(ஔவையார் விடைபெறுகின்றார். அரசனும் அரசியும் வணங்கி வழியனுப்புகின்றார்கள்.)

திரைவிழுதல்.

**அகராதிப் பயன்பாடு**




அறிவுரை -
புகழ் -
ஒழுக்கம் -
புலவர் -
கொடை -
ஆசனம் -

பயிற்சி

## 18.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. ஔவையார் எந்த அரசரைக் காண்பதற்காக வந்தார்?
2. ஔவையார் தனது கடமை எதுவெனக் கூறுகிறார்?
3. பாடத்திலுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.
4. அதியமான் ஔவையாருக்கு ஏன் நெல்லிக் கனியைக் கொடுத்தார்?
5. இந்நாடகத்தின் மூலம் நீங்கள் பெற்ற படிப்பினை யாது?

## 18.2 பின்வரும் சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் அமைப்போம்.

i. வாயிற்காவலன் ii. அரண்மனை iii. கொடை
iv. ஆட்சி v. அறநெறி vi. கருணை

## 18.3 ஒத்தபத இணைமொழியாயின் ‘ஒ’ எனவும் எதிர்ப்பத இணைமொழியாயின் ‘எ’ எனவும் அடையாளமிடுவோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. அக்கம் பக்கம் | ( ) | 2. உற்றார் உறவினர் | ( ) |
| 3. உயர்வு தாழ்வு | ( ) | 4. இன்ப துன்பம் | ( ) |
| 5. ஆற அமர | ( ) | 6. ஏழை எளியவர் | ( ) |
| 7. கனவு நனவு | ( ) | 8. அல்லும் பகலும் | ( ) |
| 9. நோய் நொடி | ( ) | 10. கையும் மெய்யும் | ( ) |

## 18.4 வாக்கியங்களில் வந்துள்ள இணைமொழிகளையும் இரட்டைக்கிளவிகளையும் தெரிந்து எழுதுவோம்.

1. தாறு மாறாகப் பேசாதே.
2. காலில் உள்ள புண் சுள்சுள்ளென வலிக்கிறது.
3. நாம் ஏழை எளியவருக்கு உதவி செய்ய வேண்டும்.
4. மழை நீர் சலசலவென ஓடியது.
5. பாட்டி குடுகுடுவென நடந்தார்.





இலவசப் பாடநூல்

## 18.5 பிழையான கருத்தை தரும் வாக்கியங்களின் இலக்கத் தைச் சுற்றி வட்டமிடுவோம்.

1. பூனை வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.
2. பருந்து ஒரு பறவை. அது தாவரவுண்ணி ஆகும்.
3. நாகமரம் ஒரு தாவரம். அது இலங்கையின் தேசிய மரமாகும்.
4. தமிழிலுள்ள மொத்த எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தேழு ஆகும். அவற்றுள் ஆய்த எழுத்துக்கள் இரண்டாகும்.
5. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன.

## 18.6 காட்சிப் படத்தை அவதானித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.

